


**23. 04. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாகவும், அமைதியாகவும் தற்போது நடைபெற்று வருகிறது.

இளையோரும், முதல்முறை வாக்காளர்களும் ஆர்வத்துடன் வாக்குகளை செலுத்தி வருகின்றனர்.

2. தமிழ்நாட்டில் சராசரியாக பகல் ஒருமணி நிலவரப்படி 56 . 81 சதவிகித வாக்குகள் பதிவாயின.

3. மேற்கு வங்ககத்தில் 152 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

4. தமிழகத்திலும் மேற்கு வங்கத்திலும் மக்கள் தங்களது ஜனநாயக கடமையை செலுத்துமாறு பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவுறுத்தியுள்ளார்.

5. ஐ.பி.எல் 20-20 கி◌ா◌ிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் – சென்னை சூப்பர் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இனி வி◌ா◌ிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

வாக்குப்பதிவு

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்ட வாக்குப்பதிவு தற்போது அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

பகல் ஒருமணி நிலவரப்படி 56.81 சதவிகித வாக்குகள் பதிவாயின.

திருப்பூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 62.97 சதவிகித வாக்குகளும்

குறைந்த பட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 50.35 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தொிவித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 57.66 சதவிகித வாக்குகள் பதிவாயின.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

மாலை 6 மணிவரை வாக்குச்சாவடிகளில் காத்துநிற்கும் வாக்காளர்கள் வாக்களிக்க கூடுதல் கால அவகாசம் வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கட்சி த்தலைவர்கள் வாக்களிப்பு

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்,

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன்

துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின்

பி.ஜே.பி. தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன்,

த.வெ.க. தலைவர் திரு.விஜய், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் ஆகியோர் தத்தம் தொகுதிகளில் தமது வாக்கை செலுத்தினர்

மக்கள் நீதிமைய கட்சித்தலைவர் திரு. கமலஹாசன்,

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா

பா.ம.க. தலைவர் திரு. அன்புமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வ பெருந்தகை

காங்கிரஸின் திரு. ப. சிதம்பரம், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல். திருமாவளவன்,

திராவிடக்கழக தலைவர் திரு. கி. வீரமணி

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் திரு. வைகோ

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன்

உள்ளிட்டோரும் இன்று வாக்குகளை செலுத்தினர்.

சென்னை விருகம்பாக்கத்தில் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் வாக்களித்தார்.

மாநில அமைச்சர்கள் திரு. கே.என். நேரு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.மெய்யநாதன், திரு. M.R.K. பன்னீர் செல்வம், திரு. அனிதா ராதா கிருஷ்ணன்

முன்னாள் அமைச்சர்கள் திரு. செங்கோட்டையன், திரு. ஓ. பன்னீர் செல்வம், திரு. ஜெயக்குமார்,

சட்டப்பேரவைத்தலைவர் திரு. அப்பாவு,, சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. பிச்சாண்டி ஆகியோர் வாக்குகளை செலுத்தினர்.

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், அக்கட்சியின் திரு. அண்ணாமலை, டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன், மாநில துணைத் தலைவர் திரு. கே.பி. ராமலிங்கம் உள்ளிட்டோரும் வாக்களித்தனர்.

திரைப்பட நடிகர்கள், ரஜினிகாந்த், அஜித்குமார், சிவகார்த்திகேயன், தனுஷ், விக்ரம், சூர்யா உள்ளிட்டோர் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜாய்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வாக்குப்பதிவு முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில் சென்னை உட்பட தமிழகத்தின் வாக்குப்பதிவு நிலவரம் குறித்து எமது சிறப்பு செய்தியாளர் ஜாய் தெரிவிக்கிறார்.

.. ஜாய் வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

மாவட்ட ஆட்சித்தலைவர்கள்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தத்தம் பகுதிகளில் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

கோவை அரசு கலைக்கல்லூா◌ி வாக்குச்சாவடியில் ஆட்சித்தலைவர் திரு. பவன்குமார் வரிசையில் நின்று வாக்கு செலுத்தினார்.

பெரம்பலூர் ரோவர் மேல்நிலைப்பள்ளி வாக்குச் சாவடியில் ஆட்சித்தலைவர் திருமதி. மிருனாளினி,

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி

மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. பிரவீன் குமார்,

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்சித் சிங் ஆகியோர் இன்று வாக்கு செலுத்தினர்.

தர்மபுரி எரப்பட்டி வாக்குச்சாவடியில் மாவட்ட ஆட்சித் தலைவரும் தேர்தல் அலவலருமான திரு. சதீஷ் தமது வாக்கை பதிவு செய்தார்.

முதல்முறை வாக்காளர்களுக்கு சான்றிதழ்களையும், மரக்கன்றுகளையும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருச்சி வாய்ஸ்

திருச்சி மாவட்டத்தில் முதல்முறை வாக்காளர்களும், இளையோரும் அதிகளவில் வாக்கு செலுத்தி வருவதாக சொல்றாங்களே

வாக்குப்பதிவு நிலவரம் எப்படி இருக்கு கதிரவன் !

.. கதிரவன் வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

வாக்குப்பதிவு இயந்திரம் பழுது

திருச்சி தில்லைநகர், மக்கள் மன்றத்தில் உள்ள வாக்குச்சவாடி மையத்தில் வி.வி.பேட் இயந்திரம் செயல்படாததால் வாக்காளர்கள் 45 நிமிடங்கள் காத்திருந்த பின்னர் வேறு இயந்திரம் கொண்டு வரப்பட்டு வாக்குப்பதிவு தொடங்கியது.

பெரம்பலூர் மாவட்டம் மருதடி, துறைமங்கலம், பாளையூர், நேஷனல் ஐ.டி.ஐ. வாக்குச்சாவடிகளில், வாக்குச்சாவடி இயந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் வாக்குப்பதிவு சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

இதேபோல் மயிலாடுதுறை தேசிய துவக்கப்பள்ளி குருமூர்த்தி நடுநிலைப்பள்ளி, காவிரி நகர் பகுதிகளிலும் இயந்திரங்கள் பழுதால் வாக்குப்பதிவு தாமதமானது.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார் பேட்டை பகுதியில் பழுதான இயந்திரம் சரி செய்யப்பட்டு வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெற்று வருகிறது.

நாகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச் சாவடியில் இயந்திரம் பழுதானதால் ஒருமணி நேரத்திற்கும் மேல் வாக்காளர்கள் காத்திருந்து வாக்களித்தனர்.

தற்போது இச்சாவடியில் வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெற்று வருவதாக அதிகா◌ா◌ிகள் தொ◌ிவித்தனர்.

தேர்தலை ஒட்டி நீலகி◌ா◌ி மாவட்டத்தில் வாக்குப்பதிவை உறுதிசெய்யும் வகையில் சுற்றுலாத்தலங்கள் இன்று ஒருநாள் மட்டும் மூடப்பட்டுள்ளன

திருப்பூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் வாக்காளர்களை வெயிலிருந்து பாதுகாக்கும் வகையில் சில வாக்குச்சாவடி மையங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரம்பலூர், அரியலூர் பகுதிகளிலும் முதல்முறை வாக்காளர்களும், இளையோரும் அதிகளவில் வாக்குகளை செலுத்தினர்.

முதியவர்களும் மாற்றுத்திறனாளிகளும் தங்களது வாக்குகளை ஆர்வத்துடன் செலுத்தி வரும் நிலையில் திருச்சிராப்பள்ளியில் வாக்களிக்க வந்த 93 வயது முதியவர் வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகள் சிறப்பாக இருப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கண்காணிப்பு

ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு.கந்தசாமி, சம்பத் நகர் வாக்குச்சாவடி மையத்தில் தனது வாக்கை செலுத்திய பின்னர் மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 379 வாக்குச்சாவடிகளும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதாக தொிவித்தார்.

அரியலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ரத்தினசாமி, ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து அனைத்து வாக்குச்சாவடிகளையும் இணையதளம் மூலம் கண்காணித்தார்.

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறையிலிருந்து வாக்குச்சாவடிகளில் அமைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. நேரடி காட்சிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சதீஷ் ஆய்வு செய்தார்.

திருப்பத்தூர், வாணியம்பாடி பெரிய பேட்டை பகுதியில் தி.மு.க. மற்றும் த.வெ.க. நிர்வாகிகளிடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சியாமளா தேவி விசாரணை மேற்கொண்டார்.

பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்ததன் பேரில் வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெற்றது.

நாகை மாவட்டத்தின் 700 வாக்குச்சாவடி மையங்களிலும் காலை 7 மணி முதற்கொண்டே வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வெயிலின் தாக்கம் சற்று அதிகமாகவே காணப்பட்ட போதிலும் அதனை பொருட்படுத்தாது பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்குகளை செலுத்தினர்.

முதல்முறையாக வாக்கு செலுத்தும் வாக்காளர்கள் வாக்களிப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறினர்.

மதுரையில் செல்ஃபி பாயிண்ட் மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திண்டுக்கல் மாவட்டத்தில் போக்குவரத்து வசதி இல்லாத வெள்ளை கவி மலை கிராமத்தில் 50 சதவிகித வாக்கு பதிவாகி உள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சரவணன் தொிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அனைத்து வாக்குச் சாவடிகளிலும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 சட்டப் பேரவை தொகுதிகளிலும் 2 ஆயிரத்து 29 வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று வருவதாக எமது தூத்துக்குடி செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

திருப்பூர் வாய்ஸ்

திருப்பூாில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் வாக்கு செலுத்துவதற்காக வந்த மூதாட்டியின் வாக்கு ஏற்கனவே செலுத்தப்பட்டதை அடுத்து டெண்டர் ஓட்டு மூலம் சீட்டு வழங்கப்பட்டு அவர் வாக்கு செலுத்தியதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் சிறப்பு வசதி

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள், முதியோர் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக 541 வாக்குச் சாவடி மையங்களிலும் சக்கர நாற்காலி வசதி செய்யப்பட்டுள்ளதோடு, தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோவை மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவை தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு ஒரு மாதிரி வாக்குச் சாவடி பெண் பணியாளர்களால் நிர்வகிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் எளம்பலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடியில் 3 சக்கர நாற்காலியில் ஆர்வத்துடன் வந்து மூதாட்டி ஒருவர் தனது வாக்கை செலுத்தினார்.

கள்ளக்குறிச்சியில் வாக்காளர்களை வெயிலிருந்து பாதுகாக்கும் வகையில் சில வாக்குச்சாவடி மையங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானல் மூஞ்சிக்கல் பகுதி வாக்குச் சாவடி மையத்தில் முதல்முறை வாக்காளர்களை கவரும் வகையில் சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டு அலங்கரிக்கப் பட்டுள்ளதோடு, மாதிரி வாக்குச்சாவடி மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் முதியோர் வாக்களிக்க ஏதுவாக வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

நாமக்கல் கொசவம்பட்டி பகுதியில் இன்று திருமணம் நடைபெற்ற புதுமண தம்பதியினர் மணக் கோலத்தில் வந்து வாக்களித்தது அனைவரையும் கவர்ந்தனர்.

இதேபோல் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் புதுமண தம்பதி தங்களது ஜனநாயக கடமையை ஆற்றினர்.

காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்களில் முதல்முறை வாக்காளர்கள் அதிகளவில் திரண்டு வாக்களித்தனர்.

சிவகங்கை மாவட்டத்தில் வாக்குப்பதிவு படிப்படியாக அதிகரித்துள்ளதாகவும், வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்குகளை செலுத்தி வருவதாகவும் எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

தேர்தலை ஒட்டி நீலகிாி மாவட்டத்தில் வாக்குப்பதிவை உறுதிசெய்யும் வகையில் சுற்றுலாத் தளங்கள் இன்று ஒருநாள் மட்டும் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

இத்தேர்தலில் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்களின் வெற்றியை 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்க உள்ளனர்.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச் சாவடி மையங்களில் வாக்குப்பதிவு நடைபெறுவதை ஒருலட்சத்து 50 ஆயிரத்து 128 கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தலைமை செயலகத்தில் தேர்தல் ஆணையம் கண்காணித்து வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஐந்து முனை

இத்தேர்தலில் ஐந்துமுனை போட்டியாக

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி,

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி,

தமிழக வெற்றிக்கழகம்,

நாம் தமிழர் கட்சி மற்றும்

டாக்டர் ராமதாஸ் பாட்டாளி மக்கள் கட்சி,

அகில இந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக்கழக கூட்டணி ஆகியவை களமிறங்கி உள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் பிரதமர்

தமிழகம், மேற்குவங்கம் சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

இளையோரும், பெண்களும் தங்கள் வாக்குகளை கட்டாயம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மேற்கு வங்கம்

மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக 152 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் வாக்குப் பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

பகல் ஒரு மணி நிலவரப்படி 62.18 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

கி◌ா◌ிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கி◌ா◌ிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் – சென்னை சூப்பர் கிங்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖